DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KANGAYAM**

| | | |
|---|---|---|
| Calender | : | CC .No.05/2022 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.2 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பார்த்திபன் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | பழனிசாமி | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 21.06.2024.

**முதல் விசாரணை**

1. நான் தற்போது கோவை மாவட்டம், சிங்காநல்லூர் சரக காவல் உதவி ஆணையராக பணிபுரிந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு வெள்ளகோவில் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது கடந்த 09.01.2021ம் தேதி வெள்ளகோவில் காவல் நிலைய உதவி ஆய்வாளர் திரு.விஜயபாஸ்கர் என்பவர் நிலைய அலுவலில் இருந்தபோது நிக்சன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துபூர்வமான புகாரினை பெற்று அதன் தன்மைக்கேற்ப வெள்ளகோவில் காவல் நிலைய குற்ற எண் 15/2021 பிரிவுகள் 279, 337, 338, 304(ஏ) இ.த.ச படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து இவ்வழக்கு கோப்பை புலன் விசாரணைக்காக எனது பார்வைக்கு வைத்தார். அந்த **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 2** ஆகும்.

2. பின்பு நான் இவ்வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு 09.01.2021ம் தேதி காலை சுமார் 07.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் ஜெயகுமார், துரைசாமி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன்.

அந்த **பார்வை மகஜர் அ.சா.ஆ.3, மாதிரி வரைபடம் அ.சாஆ.4 ஆகும்.** பின்பு சாட்சிகளை தனிதனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

3. பின்பு இவ்வாகன விபத்தில் இறந்துபோன மயில்சாமி என்பவரின் பிரேதத்தன் மீது காங்கயம் அரசு மருத்துவமனையின் சவகிடங்கில் வைத்து பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை செய்து பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். பின்பு காவலர் திரு. பாலகுரு என்பவர் மூலம் உரிய வேண்டுகோள் கடிதத்துடன் பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் சாட்சிகளை தனிதனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அந்த **பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.5** ஆகும்.

4. மேலும் வாகன விபத்தில் இறந்து போன கௌசல்யா என்பவரின் பிரேதத்தன் மீது காங்கயம் அரசு மருத்துவமனையின் சவகிடங்கில் வைத்து பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் உதவி ஆய்வாளர் திரு. விஜயபாஸ்கர் பிரேத விசாரணை செய்து பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்துள்ளார். பின்பு காவலர் திரு.செம்பியம் என்பவர் மூலம் உரிய வேண்டுகோள் கடிதத்துடன் பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தேன். மேலும் விபத்தில் இறந்து போன இந்து என்பவரின் பிரேதத்தன் மீது காங்கயம் அரசு மருத்துவமனையின் சவகிடங்கில் வைத்து பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் உதவி ஆய்வாளர் திரு.முரளிதரண் என்பவர் பிரேத விசாரணை செய்து பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்துள்ளார். பின்பு காவலர் திரு. சுதா என்பவர் மூலம் உரிய வேண்டுகோள் கடிதத்துடன் பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்துள்ளார்.

5. பின்பு இவ்வழக்கின் எதிரியை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்டுபடுத்தினேன். பின்பு இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட TN 47 Q 9711 என்ற எண் கொண்ட லாரியையும், மற்றொரு வாகனமான TN 37 DE 4395 என்ற காரை 12.01.2021ம் தேதியும், மற்றொரு வாகனமான TN 49 BC 3258 என்ற எண் கொண்ட மாருதி காரை 06.03.2021ம் தேதி மோட்டார் வாகன ஆய்விற்கு அனுப்பி வைத்தேன். பின்பு 05.05.2021ம் தேதி மோட்டார் வாகன ஆய்வாளரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் பெற்றேன். அந்த **மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் அ.சா.ஆ.6, அ.சா.ஆ.7, அ.சா.ஆ.8** ஆகும்.

6. பின்னர் இவ்வழக்கு விபத்தில் காயம்பட்ட கலைவாணி, கௌதம், ரம்யா ஆகியோர்களுக்கு முதலுதவி சிகிச்சை அளித்த ஸ்ரீபாலாஜி

அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேட்டு நகல்/காயச்சான்று பெற்றேன். அந்த **விபத்து பதிவேட்டு நகல்கள் அ.சா.ஆ.9, அ.சா.ஆ.10, அ.சா.ஆ.11** ஆகும். மேற்படி மூன்று நபர்களுக்கு சிகிச்சை அளித்து காயச்சான்று வழங்கிய டாக்டர் முத்தூஸ் மருத்துவமனை மருத்துவர் டாக்டர்.ஜெயசிங் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்று பெற்றேன். **கலைவாணியின் காயச்சான்று அ.சா.ஆ.12, கௌதமின் காயச்சான்று அ.சா.ஆ.13, ரம்யாவின் காயச்சான்று அ.சா.ஆ.14** ஆகும்.

7. பின்னர் இவ்வழக்கில் இறந்துபோன மயில்சாமி, இந்து, கௌசல்யா ஆகிய மூவருக்கும் பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் திரு.பிரகாஷ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பிரேத பரிசோதனை சான்று பெற்றேன். **அந்த பிரேத பரிசோதனை சான்றுகள் அ.சா.ஆ.15 , அ.சா.ஆ.16, அ.சா.ஆ.17** ஆகும். வழக்கின் காயம்பட்ட சாட்சி குருகௌதமுக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என மருத்துவர் சான்று வழங்கியதால் பிரிவுகள் 279, 337, 338, 304(ஏ) இ.த.சவிலிருந்து 279, 338, 304(ஏ) இ.த.ச வாக சட்டப்பிரிவு மாறுதல் செய்து இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரி மீது 05.05.2020 ம் தேதி குற்ற அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

1. இவ்வழக்கு சாட்சி பட்டியலில் உள்ள அனைவரும் இறந்து போனவரின் உறவினர்கள் என்றால் சரிதான். இந்த வழக்கில் தனிநபர் சாட்சிகள் யாரையும் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கின் புகார்தாரர் சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சி இல்லை என்றால் சரிதான். விபத்தானது காங்கயம்-கரூர் மெயின் ரோட்டில் நடந்துள்ளது என்றால் சரிதான். விபத்தானது அதிகாலை 04.45 மணிக்கு நடந்துள்ளது என்றால் சரிதான். விபத்து ஏற்படுத்தியதாக சொல்லப்படும் லாரியின் ஆக்சில் உடைந்த நிலையில் நின்று கொண்டிருந்த போது பின்னால் வந்த வாகனங்கள் தான் அந்த லாரியின் பின்புறமாக மோதி விபத்து ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. லாரி பழுதுடைந்து ரோட்டின் இடதுபுறமாக நின்று கொண்டு இருந்ததை பின்னால் வந்த வாகனங்கள் சரிவர கவனிக்காமல் போதுமான இடைவெளி இருந்தும் அந்த ரோட்டில் ஒதுங்கி செல்லாமல் கவனக்குறைவாகவும், அதிவேகமாகவும் வந்து நின்று கொண்டிருந்த லாரியின் பின்புறமாக மோதி விபத்தை வரவழைத்து கொண்டார் என்றால் சரியல்ல.

அவ்வாறு தன்னிச்சையாக அவர்கள் விபத்தை ஏற்படுத்திக் கொண்டுள்ள நிலையில் அந்த வாகனத்தின் மீது வழக்கு பதிவு செய்தால் விபத்தில் அடிபட்டு இறந்து போன நபர்களுக்கு இழப்பீடு கிடைக்காது என்பதால் தான் எதிரியின் மீது இந்த வழக்கை பொய்யாக பதிவு செய்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கை சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரி மீது தவறுதலாக குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்தவழக்கு விபத்திற்கு எதிரியின் கவனக்குறைவோ, அஜாக்கிரதையோ கிடையாது என்று சொன்னால் சரியல்ல.

Typed/before me in open Court read over/interpreted to the witness in the presence of the accused/ accused's pleader and admitted by the witness to be correct.

C SENTHIL KUMAR Digitally signed by C SENTHIL KUMAR Date: 2024.06.21 18:54:41 +0530

Judicial Magistrate
Kangayam.